உ

கடவுள் துணை.

தமிழ்வேதமாகிய

தேவாரப்பதிகங்களுள்

பதினைந்துபதிகம்.

இஃது

பாக்குபேட்டை

மதுரைமுதலியாரால்

திருநின்றவூர்

சபாபதிமுதலியார்

அவர்களது

ஸ்ரீபராங்குசவிலாச

அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்தார்த்தி ௵

பங்குனி ௴.

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த

சுவாமிகளருளிய

திருப்பிரமபுரத்திருப்பதிகம்.

பண்-நட்டபாஷை.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூ
வெண்மதிசூடிக், காடுடையசுடலைப்பொடிப்பூ
சியெனதுள்ளங்கவர்கள்வ, னேடுடையமலரான்
முன்நாட்பணிந்தேத்தவருள்செய்த, பீடுடைய
பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே... (௧)

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொ
ம்பவைபூண்டு, வற்றலோடுகலனாப் பலிதேர்ந்
தெனதுள்ளங்கவர்கள்வன், கற்றல்கேட்டலுடை
யார் பெரியார் கழற்கையாற் றொழுதேத்தப்,
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவிய பெம்மானிவ
னன்றே..................................(௨)

நீர்பறந்தநிமிர்புன்சடைமேலோர் நிலாவெ
ண்மதிசூடி, யேர்பறந்தவினவெள்வளை சோர
வென்னுள்ளங்கவர்கள்வ, னூர்பறந்தவுலகின்மு
தலாகியவோரூரிதுவென்னப், பேர்பிறந்தபிர
மாபுரமேவியபெம்மானிவனன்றே... ... (௩)

விண்மகிழ்ந்தமதிளெய்த துமன்றி விளங்கு
தலையோட்டி, லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெ
னதுள்ளங்கவர்கள்வன், மண்மகிழ்ந்தவரவம்ம
லர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற், பெண்ம
கிழ்ந்தபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே

ஒருமை பெண்மையுடையன் சடையன் வி
டையூருமிவனென்ன, அருமையாகவுரைசெய்ய
வமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன், கருமைபெற்
றகடல்கொள்ளமிதந்ததோர் காலமிதுவென்ன
ப், பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மா
னிவனன்றே... ....(௫)

மறைகலந்த வொலிபாடலோடாடலராகி ம
ழுவேந்தி, யிறைகலந்தவினவெள்வளைசோரவெ
னுள்ளங்கவர்கள்வன்-கறைகலந்தகடியார் பொ
ழில்நீடுயர்சோலைக்கதிர்சிந்தப், பிறைகலந்தபிர
மாபுரமேவியபெம்மானிவனன்றே... ... (௬)

சடைமுயங்குபுனலன்னனலன் னெரிவீசிச்
சதிர்வெய்த, வுடைமுயங்குமரவோடுழிதந்தெ
னதுள்ளங்கவர்கள்வன், கடன்முயங்குகழிசூழ்
குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம், பெடை
முயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே

வியரிலங்குவரையுந்தியதோள்களை வீரம்வி
ளைவித்தவுயரிலங்கையரையன்வலிசெற்றெ
னதுள்ளங்கவர்கள்வன், துயரிலங்கு முலகிற்பல

ஆழிகடோன்றும் பொழுதெல்லாம், பெயரிலங்
குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே (அ)

நாணுதல்செய்திறைகாணிய மாலொடுதண்
டாமரையானு, நீணுதல்செய்தொழியந் நிமிர்
ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்வாணுதல்செய்
மகளிர்முதலியவையகத்தவரேத்தப், பேணுத
ல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே()

புத்தரொடுபொறியில்சமணும்புறங்கூறநெ
றிநில்லா, வொத்தசொலவுலகம்பலிதேர்ந்தெ
னதுள்ளங்கவர்கள்வன், மத்தயானைமறுகவ்வுரி
போர்த்ததோர்மாயம்மிது வென்னப், பித்தர்
போலும்பிரமாபுரமேவிய பெம்மானிவனன்

அருநெறியமறைவல்லமுனியகன் பொய்கை
யலர்மேய, பெருநெறியபிரமாபுரமேவியபெ
ம்மானிவன்றன்னை, யொருநெறியமனம்வைத்து
ணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த, திருநெறிய
தமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே (௰

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகளருளி
திருவாலவாய்த்திருநீற்றுப்பதிகம்.

பண்-காந்தாரம்.

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு ... *
சுந்திரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு ... *
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு ... *

செந்துவர் வாயுமைபங்கன் திருவால் வாயான் திருநீறே.................................(௧)

வேதத்திலுள்ளது நீறுவெந்துயர்தீர்ப்பது நீறு-போதந்தருவது நீறுபுன்மைதவிர்ப்பது நீறு ஓதத்தகுவது நீறுஉண்மையிலுள்ளது நீறு, சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான்திருநீறே

முத்திதருவது நீறு முனிவரணிவது நீறு,சத்தியமாவது நீறு தக்கோர்புகழ்வது நீறு, பத்திதருவது நீறுபரவவினியது நீறு, சித்திதருவது நீறு திருவாலவாயான்திருநீறே.................(௩)

காணவினியது நீறு கவினைத்தருவது நீறு-பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பது நீறு,மாணந்தகைவது நீறுமதியைத்தருவது நீறு திருவாலவாயான்திருநீறேசேணந்தருவது நீறு(

பூசைக்கினியது நீறுபுண்ணியமாவது நீறுபேசவினியது நீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா மாசைகொடுப்பது நீறுஅந்தமாவது நீறு,தேசம்புகழ்வது நீறுதிருவாலவாயான்திருநீறே (௫)

அருத்தமாவது நீறு அவலமறுப்பது நீறு, வருத்தந்தணிப்பது நீறுவானமளிப்பது நீறு * பொருத்தமதாவது நீறு புண்ணியர் பூசும்வெண்ணீறு-திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான்திருநீறே.................................(௬)

எயில்கவை யிட்டதுநீறு இருமைக்கு முள்ளதுநீறு, பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு, துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமாவது நீறு, அயிலைப்பொலிதருசூலத்தாலவாயான் றிருநீறே()

இராவணன்மேலதுநீறு எண்ணத்தகுவதுநீறு, பராவணமாவது நீறுபாவமறுப்பதுநீறு, தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு, அராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே (அ)

மாலோடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு, மேலுறைதேவர்கடங்கள் மெய்யதுவெண்பொடிநீறு, ஏலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு; ஆலமதுண்டமிடற்றெம்மாலவாயான் றிருநீறே................................ ....(கூ)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக், கண்டிகைப்பிப்பது நீறுகருதவினியதுநீறு; எண்டிசைப்பட்ட பொருளாரேத்துந்தகையதுநீறு; அண்டத்தவர்பணிந்தேற்று மாலவாயான்றிருநீறே............ ....(ய)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான் றிருநீற்றைப், போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன், றேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச், சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே.............. ... .(யக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிய
கோளறுபதிகம்.

பண்-பியந்தைக்காந்தாரம்.

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி, மாசறுதிங்கள்கங்கைமுடி
மேலணிந்தனுளமேபுகுந்தவதனால், ஞாயிறு
திங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபா
ம்பிரண்டுமுடனே, யாசறுநல்லநல்லவவைநல்ல
நல்லவடியாரவர்க்குமிகவே.........................*

என்பொடுகொம்பொடாமையிவைமார்பில
ங்கவெருதேறியேழையுடனே, பொன்பொதிம
த்தமாலைபுனல்சூடிவந்தனுளமேபுகுந்தவதனா,
லொன்பதொடொன்றொடேழுபதினெட்டொ
டாறுமுடனாயநாட்களவைதா, மன்பொடுநல்ல
நல்லவடியாரவர்க்குமிகவே.........................*

உருவளர்பவளமேனியொளிநீறணிந்துஉமை
யோடு வெள்ளைவிடைமேன் - முருகலர்கொன்
றைதிங்கண்முடிமேலணிந்தனுளமே புகுந்தவ
தனாற், றிருமகள்கலையதூர் திசெயமாதுபூமிதி
சைதெய்வமானபலவு, மருநெறி நல்லநல்லவ
வைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே ... ... *

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்துமறை
யோதுமெங்கள்பரம, னதியொடுகொன்றைமா
லைமுடிமேலணிந்தனுளமேபுகுந்தவதனாற்கொ

தியுறுகாலனங்கி நமனொடுதூதர்கொடுநோய்க
ளானபலவு மதிகுண நல்லநல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.......................(௪)

நஞ்சணி கண்டனெந்தை மடவாடனோடுவி
டையேறு நங்கள்பரமன், றுஞ்சிருள்வன்னிகொ
ன்றைமுடிமேலணிந்த னுளமேபுகுந்த வதனால்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னுமிகை
யானபூதமவையு, மஞ்சிடு நல்லநல்லவவை நல்ல
நல்லவடியாரவர்க்குமிகவே...... ....(௫)

வாளரியதளதாடை வரிகோவணத்தர் மடவா
டனோடுமுடனாய். நாண்மலர்வன்னிகொன்றைந
திசூடிவந்தனுளமே புகுந்தவதனாற், கோளரியு
ழுவையோடுகொலையானகேழல்கொடுநாகமோ
டுகரடி, யாளரிநல்லநல்லவவை நல்லநல்லவடி
யாரவர்க்குமிகவே........... ....(௬)

செப்பிளமுலைநன் மங்கையொருபாகமாவி
டையேறு செல்வனடைவாரொப்பிளமதியுமப்
புமுடிமேலணிந்த னுளமேபுகுந்தவதனால்; வெ
ப் பொடுகுளிரும்வாதமிகையான பித்தும்வினை
யானவந்து நலியா; வப்படி நல்லநல்லவவை நல்ல
நல்லவடியாரவர்க்குமிகவே...... ....(௭)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய், வாண்மதிவன்னிகொ
ன்றைமலர்சூடிவந்தனுளமேபுகுந்தவதனா, லே
ழ்கடல்சூழிலங்கையரையன்றனோடுமிடரானவ

ந்துநலியா, வாழ்கட நல்லநல்ல வவைநல்ல நல்லவடியாரவர்க்குமிகவே.................(௮)

பலபலவேடமாகும்பரனாரிபாகன்பசுவேறுமெங்கள்பரமன், சலமகளோடெருக்கு முடிமேலணிந்தனுளமே புகுந்தவதனால்; மலர்மிசையோனுமாலுமறையோடு தேவர்வருகாலமானபலவு,மலைகடன்மேருநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே......... .. .. (௯)

கொத்தலர்குழலியோடுவிசயற்குநல்குணமாயவேடவிகிர்தன்;மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தனுளமேபுகுந்தவதனற், புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ணதிருநீறுசெம்மைதிடமே,யத்தகுநல்லநல்லவவைநல்லநல்ல வடியாரவர்க்குமிகவே........................ ... ...(௰)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர்செம்பொனெங்குநிகழ,நான்முகனாதியாயபிரமாபுரத்துமறைஞானமுனிவன், றானுறுகோளுநாளுவடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெய்,யானசொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே...... ... (௰௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய பஞ்சாக்ஷரப்பதிகம் - பண் - காந்தாரபஞ்சமம்.

துஞ்சலுந் துஞ்சிலிலாதபோதினு...............*

நெஞ்சகநைந்துநினைமினாடொறும்.........*
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்...............*
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே... ...(௧)

மந்திரநான்மறையாகிவானவர்... ......*
சிந்தையுநின்றவர்தம்மையாள்பவன்..........*
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்.......*
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.........(௨)

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர் ..*
ஞானவிளக்கினையேற்றிநன்புலத்..........*
தேனைவிழித்திறந்தேத்துவார்க்கிட.. .. ..*
ரானகெடுப்பனவஞ்செழுத்துமே.........(௩)

நல்லவர்தீயரெனாதுநச்சினர்...... .....*
செல்லல்கெடச்சிவமுத்திகாட்டுவ..........*
கொல்லநமன்றமர்கொண்டுபோமிடத்... ...*
தல்லல்கெடுப்பனவஞ்செழுத்துமே... ...(௪)

கொங்கலர்வன்மதன்வாளியைந்தகத்......*
தங்குளபூதமுமஞ்சவைம்பொழி...... .....*
தங்கரவின்படமஞ்சுதம்முடை... ....*
யங்கையிலைவிரலஞ்செழுத்துமே...... ...(௫)

தும்மலிருமறொடர்ந்தபோழ்தினும் ...*
வெம்மைநரகம்விளைந்தபோழ்தினு........*
மிம்மைவினையடர்த்தெய்துபோழ்தினு......*
மம்மையினுந்துணையஞ்செழுத்துமே ...(௬)

வீடுபிறப்பையறுத்துமெச்சினர்... ...*

பீடைகெடுப்பனபின்னைநாடொறு ......*
மாடுகொடுப்பனமன்னுமாநட...... ... .*
மாடியுகப்பனவஞ்செழுத்துமே.........(எ)
வண்டமரோதிமடந்தைபேணின.........*
பண்டையிராவணன்பாடியுய்ந்தன... ... ...*
தொண்டர்கள்கொண்டுதுதிப்பினன்னவர்க் *
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே... ...(அ)
கார்வணனான்முகன்காணுதற்கொணாச் ...*
சீர்வணச்சேவடிச்செவ்விநாடொறும்... ...*
பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்......*
கார்வணமாவனவஞ்செழுத்துமே ....(௯)
புத்தர்ச மணர்கழுக்கையர்பொய்க்கொளாச்,
சித்தத்தவர்கடெளிந்துதேறின................*
வித்தகநீறணிவார்வினைப்பகைக்... ... ...*
கத்திரமாவனவஞ்செழுத்துமே..............(௰)
நற்றமிழ்ஞானசம்பந்தன்மறை ... ...*
கற்றவன்காழியர்மன்னனுன்னிய...........*
வற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்.........*
துற்றனவல்லவரும்பராவரோ...... ......(௰௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய

நமச்சிவாயப்பதிகம்.

பண்-கௌசிகம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி...... ...*

போதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது ... *
வேதநான்கினுமெய்ப்பொருளாவது ... ...*
நாதநாமநமச்சிவாயவே.................(௧)

நம்புவார்நமர்நாவினவிற்றினால் ....*
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது... .....*
செம்பொனார்திலதம்முலகுக்கெலா...... ...*
நம்பனாமநமச்சிவாயவே...................(௨)

நெக்குளார்வமிகப்பெருகிநினைந்..........*
தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்... ..*
தக்கவானவராத்தகுவிப்பது......... ... ...*
நக்கனாமநமச்சிவாயவே............... ...(௩)

இயமன்றூதருமஞ்சகரின்சொலா ... ...*
னயம்வந்தோதவல்லார்தமைநண்ணினு ...*
னியமந்தானினைவார்க்கினியானெற்றி.........*
நயனனாமநமச்சிவாயவே......... ... ...(௪)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக ... *
ளில்லாரேனுமியம்புவராயிடி ....*
னெல்லாத்தீங்கையுநீக்குவரென்பரா..........*
னல்லார்நாமநமச்சிவாயவே...............(௫)

மந்தரம்மனபாவங்கண்மேவிய...... ..*
பந்தனையவர்தாமும்பகர்வரேற்...... ... ...*
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா .... *
னந்திநாமநமச்சிவாயவே......... ... ... (௬)

நரகமேழ்புகநாடினராயினு...... ... ...*

ரைசெய்வாயினராயினுருத்திரர்... ... ...*
விரவியேபுகுவித்திடுமென்பரால்...........*
வரதநாமநமச்சிவாயவே..................(௭)

இலங்கைமன்னனெடுத்தவடுக்கன்மேற்...*
றலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலு ... ...*
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை ... ...*
நலங்கொணாமநமச்சிவாயவே......... ...(௮)

போதன்போதனகண்ணனுமண்ணறன்!...*
பாதந்தான்முடிநேடியபண்பரா ....*
யாதுங்காண்பரிதாகியலந்தவ............. ...*
ரோதுநாமநமச்சிவாயவே............ ...(௯)

கஞ்சிமண்டையர்கையிலுண்கையர்கள்...*
வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்பரால்... *
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய் ... *
நஞ்சுண்கண்டநமச்சிவாயவே ....(௰)

தந்திநாமநமச்சிவாயவெனுஞ் ... ...*
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற் ...*
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம் ..*
பந்தபாசமறுக்கவல்லார்களே .... (௰௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய
திருமயிலாப்பூர்ப்பூம்பாவைத்திருப்பதிகம்
பண் - சீகாமரம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்... *

கட்டிட்டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தா,
னொட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார், க
ட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய் (௧)

மைப்பயந்தவொண் கண்மடநல்லார்மாமயி
லைக், கைப்பயந்தநீத்தான்கபாலீச்சரமமர்ந்தா
னைப்பசியோணவிழாவுமருந்தவர்க-ளுப்பண
வுங்காணாதேபோதியோபூம்பாவாய்... ...(௨)

வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகிற்
றுலக்கில் கபாலீச்சுரத்தான் றொல்கார்த்திகை
நாட்,டளத்தேந்திளமுலையார் தையலார்கொண்
டாடும்-விளக்கீடுகாணாதேபோதியோபூம்பாவா

ஊர்திரை வேலையுலாவு முயர்மயிலைக், கூர்
தருவேல் வல்லார்கொற்றங்கொள் சேரிதனிற்,
கார்த்தருள்சோலைக்கபாலீச்சரமமர்ந்தா-னாதி
ரைநாட்காணாதேபோதியோபூம்பாவாய்...(௪)

மைப்பூசுமொண்கண்மட நல்லார்மாமயிலை
க், கைப்பூசுநீற்றான்கபாலீச்சரமமர்ந்தா-னை
ய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்
டாடுந், தைப்பூசங்காணாதே போதியோ பூம்
பாவாய்..................................(௫)

மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிக் ... *
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தா...*
னடலானேறூருமடிகளடிபரவி........ ...*
நடமாடல்காணாதேபோதியோபூம்பாவாய் *

மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்......*
கலி விழாக்கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்,
பலி விழாப்பாடல் செய்பங்குனியுத்திர நா,
ளொலிவிழாக்காணாதேபோதியோபூம்பாவாய்(

தண்ணாவரக்கன்றோள் சாய்த்துகந்ததாளி
னான், கண்ணார்மயிலைக்கபாலீச்சரமமர்ந்தான்,
பண்ணார்பதினெண்கணங்கட மட்டமிநாட்; க
ண்ணாரக்காணாதேபோதியோபூம்பாவாய்...(௭)

நற்றாமரைமலர் மேனான் முகனு நாரணனு
முற்றாக்குணர்கிலாமூர்த்திதிருவடியைக் ...*
கற்றார்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான் ...*
பொற்றாப்புக்காணாதேபோதியோ பூம்பாவாய்

உரிஞ்சாயவாழ்க்கை யமணுடையைப்போ
ர்க்கு, மிருஞ் சாக்கியர்களெடுத் துரைப்பநா
ட்டிற், கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரமமர்ந்
தான்; பெருஞ்சாந்திகாணாதே போதியோ பூம்
பாவாய்..(௯)

கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்றே
னமர் பூம்பாவைப்பாட்டாகச் செந்தமிழான்,
ஞானசம்பந்தனலம் புகழ்ந்தபத்தும் வல்லார்,
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே......(௰)

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய
திருவாலவாய்ப்பதிகம்.

பண்-புறநீர்மை.

மங்கையற்கரசிவளவர்கோன்பாவை வரிவளை

க்கைமடமானி, பங்கயச் செல்விபாண்டி மா
தேவிபணிசெய்துநாடொறும்பரவ, பொங்கழ
லொருவன்பூதநாயகனால்வேதமும்பொருள் க
ளு மருளி, யங்கயற்கண்ணிதன்னொடு மமர்ந்த
வாலவாயாவதுமிதுவே....................(௧)

வெற்றவேயடியாரடிமிசைவீழும் விருப்பி
னன்வெள்ளைநீறணியுங்-கொற்றவன்றனக்குமந்
திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்த, வொற்
றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலிய
ற்கையையொழிந்திட்,டற்றவாக்கற்றசிவனுறை
கின்ற வாலவாயாவதுமிதுவே...... ......(௨)

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள் சிவன்றி
ருநீற்றினைவளர்க்கும், பந்தணைவிரலாள்பாண்டி
மாதேவி பணிசெய்யப் பாரிடநிலவுஞ், சந்தமா
ர்தரளம் பாம்புநீர்மத்தந் தண்ணெருக்கம்மலர்
வன்னி; பந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலா
லவாயாவதுமிதுவே.......... .. ..(௩)

கணங்களாய் வரினுந்தமியராய்வரினுமடிய
வர் தங்களைக்கண்டாற்-குணங்கொடுபணியுங்கு
லச்சிறைபறவுங்கோபுரஞ்சூழ் மணிக்கோயில்,
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னி வ

ண் கூவிளமாலை, பணங்குவித்திருந்தசடைமுடி யண்ணலாலவாயாவதுமிதுவே............(௪)

செய்யதாமரை மேலன்ன மேயன்ன சேயி ழைதிருநுதற்செல்வி, பையரவல்குற் பாண்டி மாதேவி நாடொறும் பணிந்தினிதேத்த, வெய் யவெற்சூலம்பாசமங்குசமான் விரிகதிர்மழுவுட ன்றரித்த, வையனுமையோடின்புறுகின்றவா லவாயாவதுமிதுவே.................. ... ...(௫)

நலமிலராகநலமதுண்டாகநாட்டவர்நாடறிகி ன்ற, குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணி குலச்சிறைபரவுங், கலைமலிகாத்தன்மூவிலைவே லன் கரியுரிமூடியகண்ட, னலைமலிபுனல்சேர்ச டைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே...(௬)

முத்தின்றாழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந் தன்மார்பினின் முயங்கப், பத்தியார்கின்றபா ண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற, சுத்த மார்பளிங்கின்பெருமலையுடனே சுடர்மரகத ம டுத்தார்போ;லத்தனுமையோடின்புறுகின்ற வாலவாயாவதுமிதுவே... ....(௭)

நாவணங்கி யல்வாமஞ் செழுத்தோதி நல்ல ராய் நல்லியல்வாங்குங், கோவணம்பூதி சாத னங்கண்டாற் றொழுதெழு குலச்சிறை போ

ற்ற-பேவணங்கியல்வாமி ராவணன் றிண்டோளி
ருபது நெரிதர ஊன்றி, யாவணங் கொண்ட ச
டைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே...(௮)

மண்ணெலா நிகழ மன்னனாய் மன்னு மணி
முடிச்சோழன்றன்மகளாம்-பண்ணினேர்மொ
ழியாள் பாண்டிமாதேவிபாங்கினற்பணி செய்
துபரவ,விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்
பரிதாம்வகைநின்ற-வண்ணலாருமை யோடின்
புறநின்றவாலவாயாவதுமிதுவே.........(௯)

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொ
ழுதுதன்குலத்தினைகுலாவ, கண்டுநாடோறுமி
ன்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்த; குண்
டராயுள்ளார்சாக்கியர்தங்கள்குறையின்கணெ
றியிடைவாரா-வண்டநாயகன்றானமர்ந்துவீற்
றிருந்தவாலவாயாவதுமிதுவே.........(௰)

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சி
றையெனுமிவர்பணியு, மன்னலம்பெறுசீரால
வாயீசன்றிருவடியாங்கவைபோற்றி, கன்னலம்
பெரியகாழியுள் ஞானசம்பந்தன் செந்தமிழி
வைகோ,டின்னலம்பாடவல்லவரிமையோரேத்
தவீற்றிருப்பவரினிதே.....................(௰௧)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரையர்

அருளிய

கோயிற்றிருநேரிசை,

பண் - கொல்லி,

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனே பரம
யோகி;யெத்தினாற்பத்திசெய்கேனென்னை நீயிக
ழவேண்டா, முத்தனேமுதல்வாதில்லையம்பலத்
தாடுகின்ற- வத்தாவுன்னாடல்கண்டானடியனே
ன்வந்தவாறே.....................................(௧)

கருத்தனாய்ப்பாடமாட்டேன்காம்பன தோ
ளிபங்கா, வொருத்தாலறியவொண்ணாத்திருவு
ருவுடையசோதி, திருத்தமாந்தில்லைதன்னுட்டி
கழ்ந்தசிற்றம்பலத்தே, திருத்தனால்காணவேண்
டிநேர்படவந்தவாறே...........................(௨)

கேட்டிலேன்கிளைபிரியேன்கேட்குமா கேட்
டியாகினாட்டினேனின்றன்பாதநடுப்படநெஞ்
சினுள்ளே, மாட்டினீர்வாளைபாயுமல்குசிற்றம்
பலத்தே, கூட்டமாங்குவிமுலையாள்கூடநீயாடி
மாறே ....(௩)

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை
யடிமைசெய்ய, வெந்தை நீயருளிச் செய்யா
யாதுநான் செய்வதென்னே; செந்தியார்வே

ளிவியோவாத்தில்லைச் சிற்றம்பலத்தே, பத்தியும்
பகலுமாடவடியிணை பலசுங்கொல்லோ...(௪)

கண்டவா திரிந்து நாளுங் கருத்தினுனின்றன்
பாதங், கொண்டிருந்தாடிப்பாடிக் கூடுவன்கு
றிப்பினாலே, வண்டுபண்பாடுஞ்சோலை மல்குசி
ற்றம்பலத்தே, பெண்டிசையோருமேத்தவிறை
வயாடுமாறே.................. ....(ரு)

பார்த்திருந்தடியனேனுன் பரவுவன்பாடியா
டி, மூர்த்தியேயென்பனுன்னை மூவரின்முதல்
வனென்ப, னேத்துவாரிடர்க டீர்ப்பாய்தில்லை
சிற்றம்பலத்துக், கூத்தாவுன்கூத்துக் காண்பா
ன் கூட நான்வந்தவாறே......................(௬)

பொய்யினைத்தவிரவிட்டுப் புறமலாவடிமை
செய்ய, வையநீயருளிச்செய்யா யாதியேயாதி
மூர்த்தி, வையகந்தன்னின்மிக்க மல்குசிற்றம்ப
லத்தே, யையவுன்னுடல் காண்பான் பரமநான்
வந்தவாறே...............................(௭)

மனத்தினுற்றிலைகத்து நாளுமாண்பலா நெ
றிவண்மாமேல, கனைப்பராலென் செய்கேனு
கறையணிகண்டத்தானே, தினைத்தினைவேதங்கு
ன்றுந்தில்லைச்சிற்றம்பலத்தே, யனைத்துநின்னி
லயங்காண்பானடியனேன்வந்தவாறே ... (௮)

நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமா
றினைப்பியாதே-வஞ்சமேசெய்தியாலோமானவ

ர்கலைவனே நீ, மஞ்சுடைச் சோலைத்தில்லைமல்கு
ச்சிற்றம்பலத்தே, பஞ்சொலாள் காண நின்றே பழக நீயாடுமாறே... ....(௮)

மண்ணுண்டமாலவனுமலர்மிசை மன்னினானும், விண்ணுண்ட திருவுருவும் விரும்பினார்காணமாட்டார், திண்ணுண்ட திருவேமிக்கதில்லைச்சிற்றம்பலத்தே, பண்ணுண்டபாடலோடுபயின்றாடுமாறே............... ....(௯)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரையர் அருளிய
நமச்சிவாயப்பதிகம்.
பண்-காந்தாரபஞ்சமம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்... ..✻
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக்கைதொழக், கற்றுணைப்பூடியோர்கடலிற்பாய்ச்சினு, நற்றுணையாவது நமச்சிவாயவே................(௧)

பூவினுக்கருக்கலம் பொங்குதாமரை யாவினுக்கருங்கலமானஞ்சாடுதல், கோவினுக்கருங்கலங்கோட்டமுள்ளது, நாவினுக்கருங்கலநமச்சிவாயவே..(௨)

விண்ணுறவடுக்கியவிறங்கின்மேல்விழ, உண்ணியபுகினவையொன்றுமில்லையாம், பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை, நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே...............................(௩)

இடுக்கப்பட்டிருக்கினுமிரந்தியாரையும்... *
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோ... *
மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினமுற்ற ...... *
நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே... (௪)

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெல்லா... ... *
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்... ... *
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி... ... ... *
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே...... ... (௫)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கல்லா... ... *
னலமிலனாடொறுநல்குவானலன் .... *
குலமிலராகிலுங்குலத்துக்கேற்பதோர் ...... *
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே...... (௬)

வீடினாருலகினில்விழுமியதொண்டர் ... *
கூடினாரந்நெறிகூடச்சென்றலு...... ..... *
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு .. *
நாடினேனாடித்துநமச்சிவாயவே... ... ...(௭)

இல்லகவிளக்கதுஇருள்கெடுப்பது ... ... *
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது... ... ... *
பல்லகவிளக்கதுபலருங்காண்பது... ... ... *
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே...... ..... (௮)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன் ... *
றன்னெறியேசரணாதறிண்ணமே... .. .. *
யன்னெறியேசென்றடைந்தவற்கெல்லா...... *
நன்னெறியாவதுநமச்சிவாயவே... ... ... (௯)

மாப்பிணைதழுவியமாதோர்பாகத்தான்...*
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கை தொழ*
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்.........*
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே.........*

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரையர் அருளிய
கோயிற்றிருவிருத்தம்.

பண்-கொல்லி.

பாளையுடைக்கமுகோங்கிப் பன்மாடநெருங்கி
யெங்கும், வாளையுடைப்புனல்வந்தெறிவாள்வ
யற்றில்லைத்தன்னு, ளாளவுடைக்கழற் சிற்றம்ப
லத்தானாடல்கண்டாற், பீளையுடைக்கண்களாற்
பின்னைப்பெயர்தொண்டர்காண்பதென்னே(௧)

பொருவிடையொன்றுடைப் புண்ணியமூர்
த்திபுலியதள, னுருவிடையம்மலைமங்கைமணா
ளனுலகுக்கெல்லாந், திருவுடையந்தணர்வாழ்கி
ன்றதில்லைச்சிற்றம்பலவன், திருவடியைக்கண்ட
கண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே...(௨)

தொடுத்தமலரொடு தூபமுஞ்சாந்துங்கொ
ண்டெப்பொழுது, மடுத்துவணங்குமயனொடுமா
லுக்குங்காண்பரியான், பொடிக்கொண்டணிந்
துபொன்னாகிய தில்லைச்சிற்றம்பலவ, னுடுத்த
துகில் கண்டகண் கொண்டுமற் றினிக்காண்ப
தென்னே......................................(௩)

வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி
நமச்சிவாய, வச்சமொழித்தேனனி தில்லையம்
பலத்தாடுகின்ற, பிச்சன்பிறப்பிலிபேர் நந்தியு
ந்தியின்மேலசைத்த, கச்சினழகுகண்டாற்பின்
னை கண்கொண்டு காண்பதென்னே... ... (௪)

செய்ஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச்சிற்ற
ம்பலவன், மைஞ்ஞின்ற வொண்கண்மலை மக
ள்கண்டு மகிழ்ந்துநிற்ப, நெய்ஞ்ஞின்றெரியும்
விளக்கொத்த நீலமணிமிடற்றான், கைஞ்ஞின்ற
வாடல்கண்டாற் பின்னைக்கண்கொண்டு காண்ப
தென்னே.................................. (௫)

ஊனத்தைநீக்கியுலகறிய வென்னையாட்கொ
ண்டவன், றேனொத்தெனக்கினியான் றில்லைச்சி
ற்றம்பலவனெங்கோன், வானத்தருய்யவன்னஞ்
சையுண்டகண்டத்திலங்கு, மேனத்தெயிறுகண்
டாற்பின்னைகண்கொண்டு காண்பதென்னே ()

தெரித்தகணையாற்றிரி புரமூன்றுஞ் செந்தீ
யின்மூழ்க, வெரித்தவிறைவ னிமையவர்கோ
மானிணையடிக, டரித்தமனத்தவர் வாழ்கின்றதி
ல்லைச் சிற்றம்பலவன், சிரித்தமுகங் கண்டகண்
கொண்டுமற்றினிக்காண்பதென்னே... ...(௭)

சுற்றுமமரர் சுரர்பதிநின்றிருப்பாதமல்லா
ல், மற்றொன்றிலோ மென்றழைப்பப் பரவை

யுணஞ்சையுண்டான், செற்றங்கனங்கனைத்தீவி ழித்தான் றில்லையம்பலவ, னெற்றியிற்கண்கண் டகண்கொண்டு மற்றினிக்காண்ப தென்னே()

சித்தத்தெழுந்த செழுங்கமலத்தன்ன சேவ டிக்கண், வைத்தமனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன், முத்தும்வயிரமு மாணிக்கந்த ன்னுள் விளங்கியதூ, மத்தமலர்க் கண்டகண் கொண்டுமற்றினிக்காண்பதென்னே......(௯)

தருக்குமிகுத்துத் தன்றோள்வலி யுன்னித்த டவரையை, வளைக்கைகளா லெடுத்தார்ப்ப மலை மகள்கோன் சிரித்து அரக்கன்மணிமுடிபத்துமடி ந்தில்லையம்பலவ, னெருக்கியிறுத்த விரல்க ண்டகண்கொண்டு காண்பதென்னே......(௰)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரையர் அருளிச்செய்த

திருவண்ணாமலை

திருநேரிசை-பண்-கொல்லி.

ஓதிமாமலர்கடூவி யுமையவள் பங்கா மிக்க ச், சோதியே துளங்கு மெண்டோட்சுடர் மழு ப்படையினானே-யாதியேயமரர் கோவேயணி யண்ணாமலை யுளானே, நீதியா னின்னையல்லா னினையுமா நினைவிலேனே.......... ... ...(க)

பண்டனை வென்றவின்சொற் பாவையோ ர்பங்கநீல. கண்டனேகார்கொள் கொன்றை

க்கடவுளே கமலபாதா-வண் டனேயமரர் கோ
வேயணி யண்ணாமலை யுளானே, தொண்டனே
னுன்னையல்லாற்சொல்லுமா சொல்லிலேனே(

உருவமு முயிருமாகி யோதியவுலகுக் கெல்
லாம், பெருவினை பிறப்புவீடாய் நின்ற வெம்
பெருமான்மிக்க, வருவிபொன் சொரியு மண்
ணாமலையுளாயண்டர்கோவே, மருவிநின்பாதம
ல்லான்மற்றொன் றுமாடிலேனே... ... ...(௫)

பைம்பொன்னே பவளக்குன்றே பரமனே
பால்வெண்ணீறு, செம்பொனே மலர்செய்பா
தாசீர்தருமணியேமிக்க, வம்பொனேகொழித்
துவிழுமணி யண்ணாமலையுளானே, யென்பொ
னேயுன்னையல்லாலொரு நானினைவிலேனே (௬)

பிறையணி முடியினானே பிஞ்ஞகா பெண்
ணோர்பாகா, மறைவலாயிறைவாவண்டர் கொ
ன்றைபாய்வாமதேவா, வரைசழலமரரேத்தும
ணியண்ணாமலையுளானே, யிறைவனேயுன்னைய
ல்லாலியாதுநானினைவிலேனே...... ......(௭)

புரிசடைமுடியின்மேலோர் பெருபுனற்கங்
கைவைத்துக், கரியுரிபோர்வையாகக்கருதியகா
லகாலா, வரிகுலமலிந்தவண்ணாமலை யுளாயலரி
னுமிக்க, வரிமிகுவண்டுபண் செய்பாத நான்ம
றப்பிலேனே...... ....(௮)

இரவியுமதியும் விண்ணு மிருநிலம் புனலுங்
காற்று, முரகமார்புவனமெட்டுத்திசை யொளி

யுருவமானு, யரவுமிழ்மணிகொள்சோதி யண்ணி
யண்ணாமலையுளானே, பரவுநின்பாதமல்லாற்ப
ரவுநான்பற்றிலேனே...... ... .(௭)

பார்த்தனுக்கன்றுநல்கிப் பாசுபாதத்தையீ
ந்தாய், தீர்த்தநும் புலாவுகங்கை நெடுமுடி நி
லாவவைத்தா, யார்த்துவந்திண்டுகொண்டவண்ணி
யண்ணாமலையுளானே, தீர்த்தனே நின்றன்பாதத்
திறமலாற்றிறமிலேனே......... ....(௮)

பாலுநெய்ம்முதலாமிக்க பசுவிலைந்தாடுவா
னே, மாலுநான்முகனுங்கூடிக்காண்கிலாவகை
புணின்று, யாலுநீர் கொண்டல் பூசமணி யண்
ணாமலையுளானே, வாலுடையிடையாயுன்றன்மு
லரடிமறப்பிலேனே........ ....(௯)

இரக்க மொன்றியாது மில்லாக் காலனைக்க
டந்த வெம்மா, னுரத்தினால் வரையை யூக்க
வொருவிர னுதியினாலே, யரக்கனை நெரித்தவ
ண்ணாமலையுளா யமரரேறே, சிரத்தினால்வணங்
கியேத்தித்திருவடிமறப்பிலேனே.........(௰)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரையர் அருளிய

கோயிற் றிருவிருத்தம்-பண்-கொல்லி

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்
பகத்தைச், செருநட்ட மும்மதி லெய்ய வல்
லானைச்செந்நீமுழங்கத், திருநட்டமாடியைத்
தில்லைக் கிறையைச் சிற்றம் பலத்துப், பெரு

நட்டமாடியை வானவர் கோனென்று வாழ்த்
தொன்றி யிருந்து நினைமின் மகளுந் தமக்கூ
னமில்லைக், கன்றியகாலனைக் காலாற் கடிந்தா
னடியவர்க்காச்-சென்று தொழுமின் கடில்லை
யிற்சிற்றம் பலத்துநட்ட, மென்று வந்தாயெ
ன்னுமெம்பெருமான் றன் திருக்குறிப்பே (௨)
கன்மன வீர்கழிபுக் கருத்தே சொல்லிக்கா
ண்பதென்னே, நன்மன வாநவி றில்லை யுட்சி
ற்றம்பலத்து நட்டம், பொன்மலை யில்வெள்
ளிக்குன்றது போலப் பொலிந் திலங்கி, யென்
மனமேயொன்றிப் புக்கனன்போந்த சுவடில்
லையே ....(௩)
குனித்தபுருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம்
போன் மேனியிற்பால்வெண்ணீறு-மினித்தமு
டைய வெடுத்த பொற்பாத முங்காணப் பெ
ற்றான், மனித்தபிறவியும் வேண்டுவ தோகொ
வ்வைகமா நிலத்தே .... (௪)
வாய்த்தது நந்தமக்கேதோர் பிறவிமதித்திடு
முன், பார்த்தற்குப் பாசுபதமருள் செய்தவன்
பத்தருள்ளீர், கோத்தன்று முப்புரந் தீவிளை
த்தான் றில்லையம் பலத்துக், கூத்தனுக் காட்
பட்டிருப்பதன்றோ நந்தக்கூனமையே (௫)
பூத்தன பொற்சடை பொன்போன்மிளிரப்
புரி கணங்க, ளார்த்தன கோட்டி யரிந்தனப

ல்குறட்பூதகணந், தெய்த்தென வென்றிசைவண்
டுகள்பாடுஞ் சிற்றம்பலத்துக், கூத்தனிற் கூத்
துவல்லாருளரோவென்றன்கோல்வளையே (௬)
முடி கொண்ட மத்தமு முக்கணி னோக்கு
முறுவலிப்புந், துடிகொண்டகை யுந்துதை
ந்தவெண்ணீறுஞ் சுரிகுழலாள், படி கொண்
டபாகமும் பாய்புலித்தோலு மென்பாவிநெ
ஞ்சிற், குடிகொண்டவர் தில்லையம்பலக் கூத்
தன்குரைகழலே..............................(௭)
படைக்கல மாகவுன்னாமத் தெழுத்தஞ்செ
னாவிற் கொண்டேன், னிடைக்கல மல்லே னெழு
பிறப்பும்முனக்காட் செய்கின்றேன், றுடைக்
கினும்போகேன்றொழுதுவணங்கித் தூநீறணி
ந்துன், னடைக்கலங்கண்டா யணிதில்லைச்சிற்
றம்பலத்தரனே..............................(௮)
பொன்னொத்த மேனியில் வெண்ணீறணிந்
துபுரிசடைகண், மின்னொத்திலங்கப் பலிதேர்
ந்துழலும் விடங்கர் வேடஞ், சின்னத்தினான்
மலிதில்லையிற் சிற்றம் பலத்துநட்ட, மென்ன
த்தனுடல் கண்டின்புற்றதாலிவ் விருநிலத்தே ()
சாடவெடுத்துத் தக்கன்றன் வேள்வியிற் சந்
திரனை, வீடவெடுத்தது காலனை நாரணனான்மு
கனுந், தேடவெடுத்தது தில்லையுட்சிற்றம்பலத்
துநட்ட, மாடவெடுத் திட்டபாத மென்றோநம்
மையாட்கொண்டதே.............................. (௰)

திருநாவுக்கரையர் அருளிய
கோயிற்பெரியதிருத்தாண்டகம்.

அரியானை யந்தணர் தஞ்சிந்தையானை யருமறையினகத்தானை யணுவையார்க்குந், தெரியாததத்து வனைத் தேனைப்பாலைத் திகழொளியைத் தேவர்கடங்கோனைமற்றைக், கரியானை நான் முகனைக்கனலைக்காற்றைக் கனைகடலைக்குலவரையைக் கலந்துநின்ற, பெரியானைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநா ளெல்லாம் பிறவாநாளே......................................(௧)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக். காவிரிசூழ்வலஞ் சுழியுங்கருதினானை, யற்றார்க்கு மலர்ந்தார்க்குமருள் செய்வானை, யாரூரும்புகுவானையறிந்தோமென்றே. மற்றாருந்தன்னொப்பாரில்லாதானை, வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப், பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப், பேசாதநா ளெல்லாம் பிறவாநாளே......................................(௨)

கருமானி னுரிய தளேயுடையாய் வீக்கிக், கனைகழல்கள் கலந் தொலிப்ப வனல்கையேந்தி. வருமானத்திரடோள் கண்மட்டித்தாட,வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி யருமானவாண் முகத்தாளமர்ந்து காண, வமரர்கணமடிவணங்கவாடுகிற· பெருமானைப்பெரும்பற்றப்புலியூரானைப்.பேசாதநாளெல்லாம்பி

றவாநாளே..(௩)

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னை, யமரர்கடம் பெருமானை யரனைமூவர், மருந்த மரர்க்கருள் புரிந்த மைந்தன் றன்னை, மறிகட லுங்குலவரையு மண்ணும்விண்ணுந்-திருந்தொ ளிய தாரகையுந் திசைக ளெட்டுந், திரிசுடர்க ளோரிரண்டும் பிறவுமாய, பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப், பேசாத நாளெ ல்லாம் பிறவாநாளே..............................(௪)

அருந்துணையை யடியார்தமல்லறீர்க்கு, மரு மருந்தையகன்ஞாலத்தகத்துட்டோன்றி, வருந் துணையுஞ்சுற்றமு மப்பற்றும்விட்டு, வான்புல ன்களடத்தடக்கி மடவரோடு, பொருந்தணை மேல்வரும்பயனைப் போகமாற்றிப், பொதுநீ க்கித்தனை நினையவல்லோர்க்கென்றும், பெருந் துணையைப் பெரும்பற்றப்புலியூரானைப், பே சாதநாளெல்லாம் பிறவாநாளே............(௫)

கரும்பமரு மொழிமடவாள் பங்கன்றன்னைக், கனவயிரக்குன்றனைய காட்சியானை, யரும்ப மரும் பூங்கொன்றைத் தாரான்றன்னை, யரும றையோடாறங்கமாயினானைச், சுரும்பமருங்கடி பொழில்கள்சூழ் தென்னாரூர்ச், சுடர்கொழுந் தைத் துளக்கிலா விளக்கயின்க, பெரும்பொரு ளைப்பெரும்பற்றப் புலியூரானைப், பேசாதநா ளெல்லாம்பிறவாநாளே......................(௬)

வரும்பயனையெழுநரம்பி னோசை யானைவரைசிலையாய் வானவர்கண் முயன்றவாளி, யரும்பயஞ்செய் யவுணர்புர மெரியக் கோத்தவம்மானை யலைகடனஞ்சையின்றான் றன்னைச்சுரும்பமருங் குழன்மடவார் கடைக்கணோக்கிற், றுளங்காத சிந்தையராய்த் துறந்தோ றுள்ளப், பெரும்பயனைப் பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.. (௭)

காரானையீருரிவைப்போர்வையானைக், காமருபூங்கச்சி யேகம்பன்றன்னை, யாரேனுமடியவர்கட்கணி யான்றன்னை, யமரர் களுக்கறிவரியவளவிலானைப், பாரோரும் விண்ணோரும்பணியநட்டம்பயில்கின்ற பரஞ்சுடரைப்பரனையெண்ணில், பேரானைப் பெரும் பற்றப் புலியூரானைப்பேசாதேநாளெல்லாம் பிறவாநாளே

முற்றாதபான்மதியஞ்சூடினானை, மூவுலகுந்தானாய முதல்வன் றன்னைச், செற்றார்கள் புரமூன்றுஞ் சென்றான் தன்னைத்,திகழொளியைப மரகதத்தை தேனைப்பாலைக், குற்றாலத் தமர்ந்துறையுங்குழகன் றன்னைக், கூத்தாட வல்லானைக்கோனை ஞானம், பெற்றார்கள்பெரும்பற்றப்புலியூரானைப், பேசாதநாளெல்லாம் பிறவாநாளே................................ ....(௯)

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்கடிக்கமலத் திருந்தயனுங்காணா வண்ணஞ் சீ

ரொளிய கழற்பிழம்பாய்நின்ற தொல்லைத், திவ
ழொவினைச்சிந்தனையின் மயக்கந் தீர்க்கும்,பே
ரொளியையிரு நிலனும்விசும்புமற்று, மேழு
லகுங்கடந்தண்டத் தப்பா நின்ற, பேரொளி
யைப்பெரும் பற்றப் புலியூரானைப், பேசாத
நாளெல்லாம்பிறவா நாளே... ... .(௰)

திருச்சிற்றம்பலம்.

அப்பர்சுவாமிகளருளிய

திருவதிகை-திருவீரட்டானம்

பண்-கொல்லி.

கூற்றா யினவாறு விலக்ககிலீர் கொடுமை
பல்செய்தனநானறியேன், னேற்றா யடிக்கேயிரவும்
பகலும்பிரியாது வணங்குவனெப்பொழுதுந்,
தோற்றாதென்வயிற்றினகம் படியே குடரோடு
துடக்கி முடக்கியிட, வாற்றேனடியேனதிகைக்
கெடில வீரட்டானத் துறையம்மானே...(௧)

நெஞ்சம் முமக்கேயிட மாகவைத்தேனி
னையா தொருபோது மிருந்தறியேன், வஞ்சம்
மிதுவொப்பது கண்டறியேன் வயிற்றோடு து
டக்கி முடக்கியிட, நஞ்சாகிவந் தென்னை நலி
வதனை நணு காமற்றுரந்து கரந்துமிடீர், ரஞ்
சேலுமென்னீரதிகைக் கெடிலவீரட்டானத்து
றையம்மானே... ....(௨)

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல் லீர்படு வெண்டலையிற்பலிகொண்டுழல்வீர், துணிந்தே யுமக்காட்செய்து வாழலுற்றாற்சுடுகின்றது சூலைதவிர்த்தருளீர், பிணிந்தார்பொடிக்கொண்டு மெய்ப்பூசவல்லீர் பெற்றமேற்றுகந்திர்சுற்று ம்மெண்டலைகொண், டணிந்தீரடிக் கேளதிகை க்கெடிலவீரட்டானத் துறையம்மானே...(௩)

முன்னம்மடி யேனறியாமை யினான் முனி ந்தென்னைநலித்து முடக்கி யிடப், பின்னையடி யேனுமக்காளும் பட்டேன் சுடுகின்றது சூலை தவிர்த் தருளீர், தன்னை யடைந்தார் வினைதீர் ப்பதன்றோதலை யாயவர்தங்கடனாவதுதா,னன் னடையாரதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே..................................(௪)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமை யாற்கரைநி ன்றவர்கண்டுகொ ளென்றுசொல்லி, நீத்தாயக யம்புகநூக்கியிட நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன், வார்த்தையிதுவொப்பதுகே ட்டறியேன் வயிற்றோடு துடக்கிமுடக்கியிட, வார்த்தார்புன லாரதிகைக்கெடிலவீரட்டானத் துறையம்மானே.........................(௫)

சலம்பூவொடு தூபமறந்தறியேன் தமிழோ டிசைபாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலு முன் னைமறந்தறியே னுன்னாமமென்னாவின் மறந்த

றியே, னுலந்தார்தலையிற்பலி கொண்டுழல்வா
யுடனுள்ளுறு சூலைதவிர்த்தருளா, யலந்தே
னடியேனதிகைக்கெடில வீரட்டானத்துறை
யம்மானே...... ....(௬)

உயர்ந்தேன் மனை வாட்கழு மொண்பொரு
ளுமொருவர் தலைகாவலிலாமை யினால், வயந்
தேயு மக்காட்செய்து வாழலுற்றால், வலிகின்
றதுசூலை தவிர்த்தருளீர், பயந்தே யென்வயிற்
றினகம்படியே பறித்துப் புரட்டியறுத்தீர்த்தி
டநா, னயர்ந்தேனடியேனதிகைக்கெடில வீர
ட்டானத்துறையம்மானே...... ....(௭)

வலித்தேன் மிகவாட்கை மகிழ்ந்தடியென்வ
ஞ்சம்மனமொன்று மிலாமையினாற்; சலித்தா
லொருவர் துணையாருமில்லைச் சங்கவெண்குழை
க்காதுடையெம்பெருமான், கலித்தேயென்வயிற்
றினகம்படியேசலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதி
ன்ன, வலுத்தேனடி யேனதிகைக்கெடிலவீரட்
டானத்துறையம்மானே.......... ....(௮)

பொன்போல்மிளிர் வதோர்மேனியினீர் பு
ரியின்சடையீர் மெலியும் பிறையீர், துன்பே
கலைபிணியென்றிவற்றைநணுகாமற்றுரந்தும்வி
டீ; ரென்போலிகளும்மையினித்தெளியாரடி
யார்படு வதிதுவேயாகி, லன்பேயமையுமதிகை
க் கெடிலவீரட்டானத்துறையம்மானே... (௯)

போர்த்தாயங்கோரானையினி னுரிதோல்புறங் காடரங்கா நடமாடவல்லா, யார்த்தானரக்கன் றனைமால்வரைக்கீழடர்த்திட்டருள் செய்தலது கருதாய், வேர்த்தும் புரண்டும்விழுந்து மெழுந் தாலென்வேதனை யானவிலக்கியிடா, யார்த்தார் புனல்சூழ திகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே..........................(௰)

திருச்சிற்றம்பலம்.

௨

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்

அருளிச்செய்த

திருவெண்ணைநல்லூர் - பண்-ணிந்தளம்.

பித்தாபிறைசூடி பெருமானே யருளாளா, வெத்தான்மறவாதே நினைக்கின்றேன் மனத்துன் னை, வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண் ணெநல்லூரருட்டுறையு, ளத்தாவுனக்காளாயினி யல்லேனெனலாமே..........................(௧)

நாயேன்பல நாளுநினைப்பின்றி மனத்துன் னைப், பேயாய்த்திரிந் தெய்த்தேன் பெறலாகவ

ருள்பெற்றேன், வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ ரருட்டுறையு, ளாயாவுனக் காளாயினியல்லே னெனலாமே...... ......(௨)

மன்னேமறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னைப், பொன்னேமணிதானே வயிரம்மேபொருதுந்தி, மின்னார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூ ரருட்டுறையு, ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே................(௩)

முடியே னினிப்பிறவேன் பெறின் மூவேன் பெற்றமூர்த்தி, கொடியேன்பல பொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ, செடியார்பெண்ணைத்தென் பால்வெண்ணெய்நல்லூ ரருட்டுறையு, ளடிகேளுனக்காளா யினியல்லே னெனலாமே......................................(௪)

பாதம்பணிவார்கள் பெறும்பண்டம் மதுபணியா, யாதன்பொருளானேன் றிவில்லேனருளாளா, தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூ ரருட்டுறைய, ளாதியுனக்காளாயினியல்லேனெனலாமே................................(௫)

தண்ணார்மதிசூடித்தழல்போலுந்திருமேனி, யெண்ணார்புரமூன்று மெரியுண்ண நகைசெய்தாய், மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூ ரருட்டுறைய, ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே....... ....(௬)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்... ...*
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்.....*
தேனார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூ
ரருட்டுறையு, ளானாயுனக்காளாயினியல்லேனெ
னலாமே.................................(௭)

எற்றார்புரமூன்று மெரியுண்ணச்சிலை தொ
ட்டாய், தேற்றாத சொல்லித்திரிவேனோசெக்
கர்வானி, யேற்றாய்பெண்ணைத்தென்பால் வெ
ண்ணெய் நல்லூரருட்டுறையு, ளாற்றாயுனக்காளா
யினியல்லேனெனலாமே.................(௮)

மழுவாள்வலனேந்தி மறையோதிமங்கைபங்
கா, தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன் தொ
ழிலே, செழுவார்பெண்ணைத்தென்பால் வெண்
ணெய்நல்லூ ரருட்டுறையு, ளழகாவுனக் காளாயி
னியல்லேனெனலாமே.....................(௯)

காரூர்புன லெய்திக் கரைகல்லித் திரைக்கை
யாற், பாரூர்புக ழெய்தித்திகழ்பன் மாமணியு
ந்திச், சீரூர்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூ ரருட்டுறையு, ளாரூரனெம் பெருமாற்
காளல்லேனெனலாமே.....................(௰)

திருச்சிற்றம்பலம்.

தேவாரப்பதிகங்கள்.

முற்றிற்று.

உ

தேவாரப்பதிகம்-அட்டவணை.

திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய திருப்பதிகங்கள்.

பக்கம்.

திருப்பிரமபுரத்திருப்பதிகம்.................. ௩
திருவாலவாய்த்திரு நீற்றுப்பதிகம்......... ௫
கோளறுபதிகம்............................ ௮
பஞ்சாக்ஷரப்பதிகம்........................ ௰
நமச்சிவாயப்பதிகம்........................ ௰௨
திருமயிலாப்பூர் பூம்பாவைத்திருப்பதிகம். ௰௪
திருவாலவாய்ப்பதிகம்...................... ௰௬

திருநாவுக்கரையர் அருளியது

கோயிற்றிருநேரிசை........................ ௨௰
நமச்சிவாயப்பதிகம்........................ ௨௨
கோயிற்றிருவிருத்தம்..................... ௨௪
திருவண்ணாமலைதிருநேரிசை................ ௨௬
கோயிற்றிருவிருத்தம்..................... ௨௮
கோயிற்பெரியதிருத்தாண்டகம்.............. ௩௧
திருவதிகைதிருவீரட்டானம்................ ௩௪

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது.

திருவெண்ணைநல்லூர்பதிகம்.................. ௩[illegible]